I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. கேதோடு கதிர்கள் ________________ ஆல் உருவாக்கப்பட்டவை.

அ. மின்சுமையற்ற துகள்கள்

ஆ. நேர்மின்சுமை பெற்ற துகள்கள்

இ. எதிர்மின்சுமை பெற்ற துகள்கள்

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை

2. கார்பன் டைஆக்சைடு எம்முறையில் தயாரிக்கப்பட்டாலும் அதில் கார்பன் மற்றும் ஆக்சிஜனின் நிறைவிகிதம் மாறாதிருப்பது ________________ விதியை நிரூபிக்கிறது.

அ. தலைகீழ் விகித விதி

ஆ. மாறா விகித விதி

இ. பெருக்கல் விதி

ஈ. பொருண்மை அழியா விதி

3. நீரில், ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவை ____________ நிறை விகிதத்தில் இணைந்துள்ளன.

அ. 1 : 8 ஆ. 8 : 1 இ. 2 : 3 ஈ. 1 : 3

4. டால்டனின் கூற்றுக்களுள் எந்தக்கூற்று மாற்றம் அடையாமல் உள்ளது?

அ. அணுவைப் பிளக்க முடியாது

ஆ. அணுக்கள் முழு எண்களின் விகிதத்தில் ஒன்றுகூடி சேர்மங்கள் உருவாகின்றன.

இ. தனிமங்கள் அணுக்களால் ஆனவை.

ஈ. ஒரு தனிமத்தின் அனைத்து அணுக்களும் ஒரே மாதிரியானவை

5. ஒரு தனிமத்தின் அனைத்து அணுக்களும்

அ. ஒரே அணு எண்ணையும், நிறை எண்ணையும் பெற்றுள்ளன.

ஆ. ஒரே நிறை எண்ணையும் வேறுபட்ட அணு எண்ணையும் கொண்டுள்ளன.

இ. ஒரே அணு எண்ணையும் வேறுபட்ட நிறை எண்ணையும் கொண்டுள்ளன.

ஈ. அணு எண் மற்றும் நிறை எண் அகிய இரண்டும் வேறுபடுகின்றன.



OPPO F25 Pro 5G

LIVEWORKSHEETS